**தலைப்பு – 190 – சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தியில் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்பட்டுள்ளன.

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்**

| **தலைப்பு** | **திணைக்களத்தின் பெயர்** |
|---|---|
| 225 | பொலிஸ் திணைக்களம் |

**1.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

மேற்படி 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ள திகதிகளில் அந்த அமைச்சினதும் பொலிஸ் திணைக்களத்தினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் வழங்கப்பட்டன. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| தலைப்பு | அமைச்சு / திணைக்களம் | முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகள் வழங்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 190 | சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு | 2015 யூன் 12 |
| 225 | பொலிஸ் திணைக்களம் | 2015 யூன் 19 |

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்குகள்

**மொத்த ஏற்பாடும் செலவினமும்**

அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 53,485.4 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதில் ரூபா 52,611.2 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அமைச்சினதும் திணைக்களத்தினதும் தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 316.7 மில்லியன் மற்றும் ரூபா 557.5 மில்லியன் அளவில் அதாவது தேறிய நிதி ஏற்பாட்டில் 5.0 சதவீதம் மற்றும் 1.2 சதவீதமாக இருந்தன. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடுகள் | பயன்பாடு | சேமிப்புக்கள் | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 190 | 6,326.2 | 6,009.5 | 316.7 | 5.01 |
| 225 | 47,159.2 | 46,601.7 | 557.5 | 1.18 |
| மொத்தம் | **53,485.4** | **52,611.2** | **874.2** | **1.63** |

## 2.2 முற்பணக் கணக்குகள்

**அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களமொன்றிற்குரிய அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 19001 | 217.0 | 115.4 | 83.0 | 109.4 | 475.0 | 172.9 |
| 22501 | 1,400.00 | 1,073.5 | 1,100.0 | 1,116.9 | 4,500.0 | 2,348.4 |

## 2.3 கட்டுநிதிக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களமொன்றின் கட்டுநிதிக் கணக்கில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 137.1 மில்லியனாக இருந்தது.

| அமைச்சு/ திணைக்களம் | கட்டுநிதிக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா மில்லியன் |
| சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு | 7002/0000/00/0430/0014/000 | 0.5 |
| பொலிஸ் திணைக்களம் | 7002/0000/00/0031/0014/000 | 136.6 |
| **மொத்தம்** | | **137.1** |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் வைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 264.0 மில்லியனாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இலக்கம் | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா மில்லியன் |
| சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு | 6000/0000/00/0015/0201/000 | 28.8 |
| பொலிஸ் திணைக்களம் | 6000/0000/00/0015/0106/000 | 235.2 |
| **மொத்தம்** | | **264.0** |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் அமைச்சினதும் திணைக்களத்தினதும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாக தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியிலிருந்து 4 ஆம் பந்தி வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. தலைப்பு 190 – சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

## 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

---

### 3.2.1 பாதீட்டு முரண்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 06 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 5,460,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

(ii) 13 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 10 சதவீதம் முதல் 84 சதவீதம் வரை வீச்சிலான அளவினைக் கொண்டிருந்தது.

## 3.3 கட்டுநிதிக் கணக்கு

---

அமைச்சினால் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதிக் கணக்கொன்றுக்குரிய மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 558,508 ஆக இருந்தது.

## 3.4 பொது வைப்புக் கணக்கு

---

02 வருடங்களை விஞ்சிய ரூபா 2,281,224 கூட்டுத்தொகையான 6 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக இணக்கக்கூற்று

---

19001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இணக்கக் கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6,303,403 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை

மீதிகள் 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகளுக்கு குறைந்த காலவீச்சில் இருந்து வந்த போதிலும், அந்நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்கு அமைச்சு தவறியிருந்தது.

(ஆ) இறந்த மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 1,835,182 கடன் மீதி தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் நலிவுகள் வெளிப்படுத்தப்பட்டன.

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ்வறிக்கை 2015 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சினால் அவ்வறிக்கை 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### (ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

அமைச்சினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்களின் மொத்தம் ரூபா 145,986,462 ஆக இருந்ததுடன் அப்பொறுப்புக்கள் ஒரு வருடத்திற்குக் குறைந்த காலமாக இருந்து வரும் மீதிகளாக இருந்தன.

## 3.7 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

மீளாய்வாண்டின் போது பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குரிய 15 வாகனங்கள் விபத்துக்களுக்குட்பட்டமையால் ரூபா 3,908,926 ஆன நட்டங்களும் சேதங்களும் ஏற்பட்டிருந்தன. அந்த நட்டங்களையும் சேதங்களையும் பொறுப்பு

வாய்ந்த தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.8 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 59 | 39 | 20 |
| (ii) | மூன்றாம் நிலை | 365 | 201 | 164 |
| (iii) | இரண்டாம் நிலை | 9,835 | 7,947 | 1,888 |
| (iv) | ஆரம்ப நிலை | 25 | 14 | 11 |
| | மொத்தம் | **10,284** | **8,201** | **2,083** |

மீளாய்வாண்டின் இறுதி வரையில் வெவ்வேறு பதவிகளுக்குரிய மொத்த அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 20 சதவீதத்திற்கு சமமான 2,083 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4. தலைப்பு 225 – பொலிஸ் அபிவிருத்தி திணைக்களம்

### 4.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேடுகளின் வகை | | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ii) | கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

## 4.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 4.2.1 பாதீட்டு முரண்கள்

7 செலவின விடயங்களுக்காக மிகை நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தினால் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் அச்செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 15 சதவீதம் முதல் 97 சதவீதம் வரையான வீச்சிலான அளவினைக் கொண்டிருந்தது.

## 4.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தினால் 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 2,959,156 ஆக இருந்தது.

## 4.4 பொது வைப்புக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 வருடங்களைக் கடந்த ரூபா 66,624,459 கூட்டுத்தொகையான 218 வைப்புக்கள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஓய்வூதிய திணைக்களத்தினால் ஓய்வூதிய செயற்பாடுகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 2,836,442 இற்குரிய செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமல் 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(இ) வங்கிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட ரூபா 389,821 தொகையான இனங்காணப்படாத பணப் பெறுவனவு இனங்காணப்பட்டு தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) வழங்கப்பட்ட போதிலும், இரத்துச் செய்யப்பட்ட காலாவதியான ரூபா 3,293,316 பெறுமதியான 101 காசோலைகள் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 4.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

---

22501 ஆம் விடய இலக்க அரச ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 133,398,524 ஆக இருந்ததுடன், அம்மீதிகள் 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகள் வரையான காலப்பகுதியில் இருந்து நிலவி வந்த போதிலும் அந்த நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) மரணித்த, ஓய்வுபெற்ற, மற்றும் வேறு அரச நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 441,949,346 தொகையான கடன் மீதி தொடர்பாக தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்றின் பிரகாரம் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் பிரிவுக் காரியாலயங்களினால் தயாரிக்கப்படுகின்ற தனிப்பட்ட மீதிகள் வகைப்படுத்தல் என்பவற்றிற்கு இடையில் இனங்காணப்படாத ரூபா 3,434,465 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

## 4.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பொலிஸ் திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

### (அ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடாத்தல்

2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வினை மேற்கொண்டு அதன் அறிக்கை 2015 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அந்த அறிக்கை 2015 மே 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. இறுதியாக பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காக நடாத்தப்பட்டிருந்தது.

### (ஆ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்

பொலிஸ் திணைக்களத்தினால் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத ஒரு வருடத்திற்குக் குறைந்த காலமாக இருந்து வரும் பொறுப்புக்கள் ரூபா 350,270,405 ஆக இருந்தது.

## 4.7 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்தல்

### செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம்

பொலிஸ் திணைக்களத்தினால் பின்வரும் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதம் அவதானிக்கப்பட்டன.

| செயற்திட்டம் | மதிப்படப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | பூர்த்தி செய்த திகதி | 2014 திசெம்பர் 31 வரையில் செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| ------------------------------ | ------------------ | ------------------ | --------------------- | ------------------ | ------------------ | ------------------------- |
| | ரூபா | | | | ரூபா | |
| நுவரெலியா கனிஷ்ட உத்தியோகத்தர்களின் உணவகத்தினை நிர்மாணித்தல் | 36,462,890 | 2013.05.14 | 2014.03.14 | - | 28,633,176 | மின்சாரத்தை வழங்கும் போது ஏற்பட்ட சிக்கலினால் அவற்றை தீர்வு செய்வதற்கு காலம் விரயமாகியது. |
| நுவரெலியா பரிசோதகர் தரத்தின் உத்தியோகத்தர்களின் உணவகத்தினை நிர்மாணித்தல் | 59,844,108 | 2013.05.21 | 2014.02.21 | 2015.05.05 | 12,471,651 | பாதுாப்பு மதிலை நிர்மாணித்தல் |
| யாழ்ப்பாண பொலிஸ் தொகுதி கட்டிடத்தை நிர்மாணித்தல் | 252,764,798 | 2011.12.21 | 2013.06.20 | - | 118,927,916 | அளவீட்டுப் பத்திரத்தில் பெறுமதிகள் மாற்றமடைந்ததால் 2012 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய 2012/02 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அறிக்கை பெற்றுக்கொள்வதற்காக அரச நிதித் திணைக்களத்தின் கிரய மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| பருத்தித்துறை பொலிஸ் நிலைய நிர்மாணம் | 101,583,661 | 2011.12.21 | 2014.12.21 | - | 65,213,995 | அளவீட்டுப் பத்திரத்தில் பெறுமதிகள் மாற்றமடைந்ததால் 2012 ஆகஸ்ட் 07 ஆந் திகதி 2012/02 ஆம் இலக்க அரச நிதிச் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | சுற்றறிக்கையின் பிரகாரம் அறிக்கை பெற்றுக்கொள்வதற்காக அரச நிதித் திணைக்களத்தின் கிரய மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| புலஸ்திபுர பொலிஸ் நிலையத்தின் விடுதி நிர்மாணம் | 32,168,468 | 2014.03.21 | 2014.12.21 | 2015.02.05 | 29,642,596 | மேல் மாடியில் மலசலகூட முறைமை நிர்மாணம் மின்சார துண்டிக்கப்படுகின்றமை யால் பகல் காலங்களில் வேலை செய்வதற்கு முடியாதிருந்தமை, பாதுகாப்பு காரணங்கள் பேரில் இரவு காலங்களில் வேலை செய்ய முடியாமை, பாதகமான காலநிலை போன்ற காரணங்கள் |
| நெலுவ பொலிஸ் நிலைய நிர்மாணம் | 46,435,154 | 2014.03.10 | 2014.12.06 | 2015.02.10 | 32,962,671 | அதிக மழை காரணமாக கூரையை அமைத்தல் வரையான நடவடிக்கைகள் தாமதமாகியிருந்தது. |
| மருதானை நீர்த்தாங்கி நிர்மாணம் | 20,271,308 | 2014.06.18 | 2014.12.18 | - | 5,390,805 | நிர்மாணம் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பத்தில் கழிவுடன் கூடிய நீர் வழியொன்று ஏற்பட்டமைளால் மாநாகர சபையுடன் அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு நேர்ந்தமை. |

## 4.8 செயலாற்றல்

------------------------

மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தின் செயலாற்றல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாரதுாரமான குற்றங்கள்

-----------------------------------------

இலங்கையில் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் அறிக்கையிடப்பட்ட பாரதுாரமான குற்றங்கள் (சரீரரீதியானதும் சொத்துக்கள் சம்பந்தமானதுமான) தொடர்பான மீளாய்வு பின்வருமாறு.

| | குற்றங்களின் தன்மை | **2014** | | | **2013** | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அறிக்கை யிடப்பட்ட எண்ணிக்கை | தீர்வு காணப்பட்டவற்றின் எணணிக்கை | தீர்வு காணப்பட்டவற்றின் தவீதம் | அறிக்கை யிடப்பட்ட எண்ணிக்கை | தீர்வு காணப்பட்டவற்றின் எணணிக்கை | தீர்வு காணப்பட்டவற்றின் சதவீதம் |
| | **உடலியல் சார்ந்த தவறுகள்** | | | | | | |
| 01 | அபகரித்தல் /கடத்திச் செல்லல் | 1019 | 249 | 24.43 | 1075 | 887 | 82.51 |
| 02 | கடுங்காயங்களுக்கு உட்படுத்தல் | 1402 | 612 | 43.65 | 1414 | 1330 | 94.05 |
| 03 | கத்தி போன்றவற்றினால் காயங்களை ஏற்படுத்துதல் | 2635 | 1048 | 39.77 | 2683 | 2466 | 91.91 |
| 04 | மனித படுகொலைகள் /தற்கொலை செய்வதற்கு உதவி புரிதல் | 548 | 162 | 29.56 | 586 | 522 | 89.07 |
| 05 | மனித படுகொலைகளுக்கு முயற்சித்தல் | 187 | 45 | 24.06 | 209 | 191 | 91.38 |
| 06 | கற்பழிப்பு /சிறு பெண் பிள்ளைகளுடன் காமஇச்சையை தீர்த்துக்கொள்ளல் | 2008 | 249 | 12.40 | 2193 | 2051 | 93.52 |
| 07 | இயற்கைக்கு முரணான தவறுகள் /ஆண்களுக்கிடையே கடுமையான தவறான நடத்தைகள் | 560 | 54 | 9.64 | 614 | 555 | 90.39 |
| 08 | சிறுவர்களை கொடூரமாக நடத்துதல் மற்றும் சிறுவர்களை முறையற்ற வகையில் பாலியலுக்கு பயன்படுத்தல் | 376 | 65 | 17.28 | 395 | 370 | 93.67 |
| 09 | காம இச்சைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு பெண்களை /சிறுமிகளை வழங்குதல் மற்றும் வியாபாரம் | 22 | 9 | 40.90 | 09 | 08 | 88.88 |
| | **மொத்தம்** | **8757** | **2493** | **28.46** | **9178** | **8380** | **91.30** |
| | **சொத்து குற்றங்கள்** | | | | | | |
| 01 | தீ வைத்தல் | 575 | 180 | 31.30 | 444 | 286 | 64.41 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 02 | ரூபா 5,000 இற்கு மேற்பட்ட நட்டங்கள் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள் | 1193 | 329 | 27.57 | 1025 | 809 | 78.92 |
| 03 | வீடுடைப்பு மற்றும் களவு | 15024 | 3244 | 21.59 | 16123 | 6116 | 37.93 |
| 04 | கலவரம் කැරලි කෝලාහල | 11 | 3 | 27.27 | 07 | 06 | 85.71 |
| 05 | கொள்ளையடித்தல் | 4213 | 1033 | 24.52 | 4748 | 2573 | 54.19 |
| 06 | பலவந்தமாக கடத்திச் செல்லல் | 134 | 37 | 27.61 | 140 | 111 | 79.28 |
| 07 | ஏமாற்றுதல்/ மோசடியாக கையொப்பத்தைப் பெறுதல் ரூபா 100,000 இற்கு மேற்பட்ட பெறுமதி தொடர்பாக | 8633 | 3332 | 38.59 | 10421 | 6010 | 57.67 |
| 08 | பெருந்தோட்ட திரவியங்கள் உட்பட ரூபா 5,000 இற்கு மேற்பட்ட நட்டங்களை ஏற்படுத்தும் வகையில் நம்பிக்கை மோசடி செய்தல் அல்லது மிதி வண்டி மற்றும் மாடுகளை களவெடுத்தல் | 10914 | 3884 | 35.58 | 11436 | 6748 | 59.00 |
| 09 | போலி நாணயத்தாள்களை அச்சிடல் | 52 | 2 | 3.84 | 59 | 50 | 84.74 |
| 10 | அரச விரோதக் குற்றங்கள் | 0 | 0 | - | 01 | 01 | 100.0 |
| 11 | பயங்கர ஆயுதங்கள் சட்டத்திற்கு கீழ்வரும் குற்றங்கள் | 124 | 18 | 14.52 | 125 | 111 | 88.80 |
| 12 | தன்னியக்க அல்லது ரிபிடர் ரவை துப்பாக்கிகளை வைத்திருத்தல் | 21 | 4 | 19.04 | 33 | 32 | 96.96 |
| 13 | ஹெரோய்ன், கொகேன், மோசின் என்பவற்றை ஏதேனும் அளவில் உற்பத்தி செய்தல் விற்பனை செய்தல், இறக்குமதி செய்தல், அல்லது ஏற்றுமதி செய்தல் அல்லது 02 கிராம் ஹெரோய்ன் அல்லது அதற்கு மேற்பட்ட 500 கிராம் அபின் அல்லது அதற்கு மேற்பட்ட 05 கிலோ கிராம் கஞ்சா அல்லது அற்கு மேல் மற்றும் 01 கிலோ கிராம் ஹசீஸ் அளவிலான அபாயகரமான போதை வஸ்துக்களை வைத்திருத்தல் | 1153 | 505 | 43.79 | 1604 | 1594 | 99.37 |
| | **மொத்தம்** | 42047 | 12571 | 29.89 | 46169 | 24447 | 52.95 |
| | | -------- | -------- | -------- | -------- | ------- | |
| | **முழு மொத்தம்** | **50804** | **15064** | **29.65** | **55344** | **32827** | **59.31** |
| | | ==== | ==== | === | ==== | ==== | |

குற்றங்கள் தொடர்பாகவும் குற்றங்களை தீர்வு செய்வதின் செயற்திறனை மேம்படுத்துவதன் பின்னர் புலனாய்வு செயற்பாடுகளை பலப்படுத்துதல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## (ஆ) மோட்டார் வாகன கட்டுப்பாடு மற்றும் வீதிப் பாதுகாப்பு

இலங்கையினுள் 2014 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்குரிய அறிக்கையிடப்பட்ட வீதி விபத்துக்கள் தொடர்பான மீளாய்வு கீழே காண்பிக்கப்படுகின்றது.

| விபத்தின் தன்மை | 2014 | | | | 2013 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | அறிக்கையிடப் பட்ட எண்ணிக்கை | தொடரப்பட்டவ ழக்குகளின் எண்ணிக்கை | விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்ட எண்ணிக்கை | விசாரணை செய்யப்பட்டிரு க்கும் எண்ணிக்கை | அறிக்கையிடப் பட்ட எண்ணிக்கை | தொடரப்பட்டவ ழக்குகளின் எண்ணிக்கை | விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்ட எண்ணிக்கை | விசாரணை செய்யப்பட்டிரு க்கும் எண்ணிக்கை |
| பயங்கர விபத்து | 2261 | 1371 | 413 | 958 | 2190 | 1952 | 863 | 1089 |
| கடுங்காயங்களுடனான விபத்துக்கள் | 6847 | 5721 | 3582 | 2139 | 6870 | 6051 | 4748 | 1303 |
| சிறிய காயங்களுடனான விபத்துக்களின் எண்ணிக்கை | 12950 | 8709 | 7033 | 1676 | 13525 | 9689 | 8650 | 1039 |
| சேதங்களுக்குரிய விபத்துக்களின் எண்ணிக்கை | 13992 | 9216 | 8559 | 657 | 15292 | 10697 | 10005 | 692 |
| **மொத்த விபத்துக்களின் எண்ணிக்கை** | **36050** | **25017** | **19587** | **5430** | **37877** | **28389** | **24266** | **4123** |

மீளாய்வாண்டில் பயங்கர விபத்துக்கள் அதிகரித்திருந்ததுடன் விபத்துக்கள் தொடர்பாக வழக்கு தொடருதல் தொடர்பில் விசேட கவனம் கோரப்பட வேண்டியுள்ளது.

## 4.9 வங்கிக் கணக்கு செயற்பாடுகளின் குறைபாடு

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

பொலிஸ் திணைக்களத்தினால் 2014 திசெம்பர் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட 48 வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களுக்குரிய சீராக்கங்கள் தொடர்பான பகுப்பாய்வின் பிரகாரம் வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சீராக்கல் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | 06 மாதங்களுக்கு மேல் 01 வருடத்திற்குக் குறைவு | 01 வருடத்திற்கு மேல் 03 வருடத்திற்குக் குறைவு | |
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலை | 443,773 | 224,605 | 668,378 |
| (ii) | இனங்காணப்படாத வரவு | 33,162 | 82,061 | 115,223 |
| (iii) | இனங்காணப்படாத செலவு | 354,254 | 120,106 | 474,360 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விநியோகிக்கப்பட்ட போதிலும், கொடுப்பனவிற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 6 மாதம் காலம் கடந்த காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 396(இ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இனங்காணப்படாத வரவு வைத்தல்கள், செலவு வைத்தல்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.10 நட்டங்களும் சேதங்களும்**

---------------------------------------------

மீளாய்வாண்டின் போது இடம்பெற்ற நட்டங்கள் மற்றும் சேதங்கள் எதுவும் ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் பொலிஸ் திணைக்களத்திற்குரிய 2014 ஆம் ஆண்டின் போது 455 சேதங்கள் மற்றும் நட்டங்கள் ஆதன முகாமைத்துவப் பிரிவிற்கு அறிக்கையிடப்பட்டிருந்தன. அதில் 346 சம்பவங்களுக்கான மதிப்பிடப்பட்ட நட்டம் ரூபா 44,039,326 ஆக இருந்தது. 109 சேதங்கள் மற்றும் நட்டங்களுக்கான மதிப்பீட்டு நட்டம் ஆதன முகாமைத்துவ பிரிவிற்கு அறிக்யைிடப்பட்டிருக்கவில்லை.

**4.11 மனித வள முகாமைத்துவம்**

----------------------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளவாறான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 702 | 532 | 170 |
| (ii) | மூன்றாம் நிலை | 3,786 | 3,254 | 532 |
| (iii) | இரண்டாம் நிலை | 85,527 | 72,181 | 13,346 |
| (iv) | ஆரம்ப நிலை | 1,691 | 1,164 | 527 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படை) | - | 420 | - |
| | மொத்தம் | **91,706** | **77,551** | **14,575** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 14,575 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2015 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் சிவில் உத்தியோகத்தர் வெற்றிடங்களில் 480 நிரப்பப்பட்டுள்ளதுடன் எஞ்சிய வெற்றிடங்களை நிரப்வுதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டு வருவதாக பொலிஸ் மா அதிபரால் எனக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளவாறான பதவியணியினரின் எண்ணிக்கையில் ஒப்பந்த அடிப்படையில் மூன்றாம் நிலையில் ஒரு உத்தியோகத்தரும் உள்ளடக்கப்பட்டிருந்தார்